**முக்கிய வார்த்தைகள்:**
டிஜிடல் சாதனங்கள்
முன்னேற்றம்
பயனளிப்பது
நேரம்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**24 அக்டோபர் 2025 / 02 ஜமாதில் அவ்வல் ஹிஜிரி 1447**

# <u>இஸ்லாமும் டிஜிடல் ஈடுபாடும்</u>

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، أُوصِي نَفْسِي وَإِيَّاكُمْ بِتَقْوَى ٱللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ ٱلْمُتَّقُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [முஃமின்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" [பக்தியை] அதிகரித்துக் கொள்வோமாக! நமது **நேரங்களை** நற்காரியங்களாலும் **பயனுள்ள** செயல்களாலும் நிரப்புவோமாக. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது **நேரங்களில்** "பரகத்" எனும் அபிவிருத்தியை வழங்கி, அருள் புரிவானாக! அவற்றை அல்லாஹ்வுக்கு அடிபணிதல் மற்றும் நன்மைகளைச் செய்தல் ஆகியவற்றால் நிரப்புவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நாம் ஒவ்வொரு நாளும் பயன்படுத்தும் ஸ்மார்ட் ஃபோன்கள் நம்முடைய நேரங்களில் எவ்வளவு மணி நேரங்களை விழுங்கி விடுகின்றன என்பதை

நாம் அறிவோமா? இந்நிலையில், பின்வரும் கேள்விகளுக்கு நாம் நேர்மையாகப் பதில் கூறுவோமாக! நமது ஸ்மார்ட் ஃபோன்கள், டேப்லட்ஸ்கள், கணினிகள் போன்ற **டிஜிட்டல் சாதனங்களில்** நாம் எத்தனை மணி நேரங்களைச் செலவழிக்கின்றோம்? ஒன்று அல்லது இரண்டு மணி நேரங்களையா? அல்லது அதை விடக் குறைவாகவா? கூடுதலாகவா? இந்த நேரங்களோடு, திருக்குர்ஆனை ஓதுதல், திரு நபி[ஸல்] அவர்களின் வழிகாட்டுதல்களில் சிந்தித்தல் போன்ற இறை பக்திச் செயல்கள் மூலம் அல்லாஹ்வையும் அவனது தூதர்[ஸல்] அவர்களையும் பற்றிச் சிந்திக்க எத்தனை மணி **நேரங்களைச்** செலவழிக்கின்றோம் என்பதை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

எனது அன்பிற்குரிய சகோதரர்களே! **டிஜிடல்** சாதனங்கள் நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டின் மூலங்களாக உள்ளன என்பதையும், அவை நமக்குப் **பயனளிப்பவையாகவோ** அல்லது நமது கவனத்தைச் சிதற வைப்பவையாகவோ உள்ளன என்பதையும் நாம் அனைவரும் நன்கு அறிவோம். நமது வாழ்க்கை இச்சாதனங்களை மிகப் பெரிய அளவில் சார்ந்துள்ளது; இக்காலத்தில், மனிதகுலத்தால் எதிர்கொள்ளப்படும் சோதனைகளில் இது மிகப் பெரிய சோதனையாகும்.

எனவே, இன்றைய "குத்பா" பிரசங்கமானது டிஜிட்டல் சாதனங்களை முழுமையாக கைவிட வேண்டும் என அழைப்பு விடுக்கவில்லை. காரணம், இஸ்லாம், நடுநிலையாக இருக்க வேண்டுமெனவும் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தும் மார்க்கமாகும். தொழில் செய்தல், வியாபாரத்தில் ஈடுபடுதல், விளையாட்டுகளில் கலந்து கொள்ளுதல், நம்மிடமுள்ள டிஜிடல் சாதனங்கள் மூலம் **பயன் பெறுதல்** போன்ற உலக வாழ்க்கையின் யதார்த்த நிலையிலிருந்து நம்மை நாம் பிரித்துக் கொள்ள வேண்டுமென நாம் வழிகாட்டப்படவில்லை; மாறாக, மேற்கண்ட விஷயங்களை நன்மைக்காகவும், **பயனுள்ள** வகையிலும், அல்லாஹ் மற்றும் அவனது தூதர்[ஸல்] அவர்களின் போதனைகளின் மூலம் வழிகாட்டப்பட்ட நிலையிலும் பயன்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளோம்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-அன்கபூத்" எனும் அத்தியாயத்தின் 64-வது வசனத்தில் கூறுகிறான்:

وَمَا هَٰذِهِ ٱلْحَيَوٰةُ ٱلدُّنْيَآ إِلَّا لَهْوٌ وَلَعِبٌ ۚ وَإِنَّ ٱلدَّارَ ٱلْءَاخِرَةَ لَهِىَ ٱلْحَيَوَانُ ۚ لَوْ كَانُوا۟ يَعْلَمُونَ ﴿٦٤﴾

பொருள்: இன்னும், இவ்வுலக வாழ்க்கை **வீணும்** விளையாட்டுமேயன்றி, - [அதாவது **திசை திருப்புதல்** மற்றும் கேளிக்கையாகவேயன்றி] வேறில்லை. இன்னும் இவர்கள் அறிந்திருந்தால், மறுமை தான் நிச்சயமாக உண்மையான, நிரந்தரமான வாழ்க்கையாகும்.

தற்போது ஓதப்பட்ட வசனத்தில், இவ்வுலக வாழ்க்கையின் தற்காலிகமான நிலையைப் பற்றி அல்லாஹ் தெளிவாக எச்சரிக்கை செய்கின்றான். பொழுதுபோக்குகளால் நிரம்பியுள்ள இவ்வாழ்க்கையை நாம் சரியாக நிர்வகிக்கவில்லையெனில், அது நம்மை ஒன்று மகிழ்விக்கலாம்; அல்லது நமக்கு கவனச் சிதறலை ஏற்படுத்தலாம். தற்கால உலகமானது, விளையாட்டுகள், சமூக ஊடகங்கள், வீடியோக்கள், முடிவற்ற உருட்டல் செயல்பாடுகள் ஆகிய **டிஜிடல்** பொழுதுபோக்குகளால் சூழப்பட்டுள்ளது. ஒரு விஷயத்தில் நாம் சலிப்படையும் போது, மற்றொரு விஷயத்தின் பால் நம்மால் நகர முடியும். **நேரம்** கடந்து செல்வதை நம்மால் உணர முடியாத வகையில், சங்கிலித் தொடரான இவ்விஷயங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

**டிஜிடல் சாதனங்களை** சிறப்பாகப் பயன்படுத்துவதற்கான மூன்று விளக்கங்கள் இங்கு தரப்படுகின்றன:

**முதலாவதாக: நாம் நமது ஓய்வு நேரங்களை எப்படிச் செலவழிக்கின்றோம் என்பதில் எச்சரிக்கையாக இருப்பது.**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:
*"இரண்டு அருட்கொடைகள் விஷயத்தில் மக்களில் பலர் ஏமாற்றப்படுகிறார்கள்; ஒன்று உடல் நலம், மற்றொன்று ஓய்வு **நேரம்**"*
[ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்]

உடல் நலமும் ஓய்வு **நேரமும்** அல்லாஹ்வினால் வழங்கப்படும் விலைமதிக்க முடியாத அருட்கொடைகளாகும். எனினும், தற்காலத்தில் இவை இரண்டும் நாம் உற்றுப் பார்க்கின்ற ஒளிப்படத் திரைகளால் [அதாவது, ஸ்கிரீன்களால்] மெதுவாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதன் பொருள், ஒளிப்படத் திரைகளுக்கு முன்பாக [அதாவது ஸ்கிரீன்களுக்கு முன்பாக] நாம் **நேரத்தைச்** செலவழிக்கும் விஷயத்தில் அதிக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதாகும்.

ஆரோக்கியமற்ற, பயனில்லாத விஷயங்களிலிருந்து உங்களை நீங்கள் தூரமாக்கிக்கொள்ள, உங்களைப் பழக்கப்படுத்துங்கள். குறிப்பாக, வணக்க, வழிபாட்டுக்கு நெருக்கமான நேரங்களிலும், அல்லது படிக்கின்ற, தொழில் செய்கின்ற, குடும்பத்தாருடன் நேரத்தைச் செலவழிக்கின்ற **நேரங்களிலும்** பயனற்ற விஷயங்களிலிருந்து நம்மை நாம் தூரமாக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறே, சாலைகளைக் கடக்கும் போதும், கழிவறைகளில் நுழையும் போதும் அல்லது உங்களின் ஓய்வையும் நீண்ட கால உடல் நலத்தையும் பாதிக்கும் அளவுக்கு நீண்ட நேரம் விழித்திருக்கும் விஷயத்திலும் பயனற்ற விஷயங்களைத் தவிர்க்க வேண்டும்.

**இரண்டாவதாக: தொழில் நுட்பங்களை தனிப்பட்ட முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துவது**

நவீன **சாதனங்களை**, தனிப்பட்ட மற்றும் ஆன்மீக ரீதியிலான **முன்னேற்றத்திற்காகவும்** பயன்படுத்தலாம். நமது கல்வியறிவை

வளர்க்கக்கூடிய, அல்லாஹ்வுடனான நமது உறவைப் பலப்படுத்தக்கூடிய பல **டிஜிடல்** தளங்கள் உள்ளன; உதாரணமாக, திருக்குர்ஆன் மற்றும் ஹதீதை எடுத்துக் கொள்ளலாம்; இன்று ஆன்-லைன் வகுப்புகள், மார்க்க சொற்பொழிவுகள், திருக்குர்ஆன் மற்றும் ஹதீதின் டிஜிடல் பதிப்புகள் போன்ற ஆதாரப்பூர்வமான பொருளடக்கங்கள் மிகப் பெரிய அளவில், நமது விரல் நுனிகளில் கிடைப்பவையாக உள்ளன; இவையெல்லாம், மார்க்கத்தைப் பற்றி ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு உதவியாக உள்ளன; நாம் எங்கிருந்தாலும் திக்ரு [தியானம்] மற்றும் கல்வியறிவுடன் நமக்குத் தொடர்பை ஏற்படுத்துபவையாக உள்ளன.

எனினும். ஆன்-லைன் மூலம் கிடைக்கும் கல்வியறிவை மதிப்பீடு செய்வதிலும் நாம் எச்சரிக்கையாகவும் அறிவுப்பூர்வமாகவும் இருக்க வேண்டும். Artificial intelligence (AI) முதற்கொண்டு, அனைத்து நவீன தொழில் நுட்பங்களானவை, செய்திகள் நமக்கு எளிதாகக் கிடைக்க உதவியாக உள்ளன; எனினும், இவ்விதமானச் செய்திகளுக்கு வரம்புகள் உள்ளன; அச்செய்திகள் நமக்கு ஆழமானப் புரிந்துணர்வை ஏற்படுத்தாதவையாக இருக்கலாம்; அவற்றில் ஆன்மீக வழிகாட்டுதல்கள் குறைவாக இருக்கலாம்; மார்க்க சம்பந்தமான விஷயங்களை சரியாகப் புரிந்து கொள்ளப்படாதவையாக இருக்கலாம்.

எனவே, ஆதாரப்பூர்வமான மார்க்க வழிகாட்டுதலைப் பெறுவதற்கு நாம் தகுதிபெற்ற மார்க்க அறிஞர்களை [அசாதிதாக்களை] அணுகுவது அவசியமாகும். கல்வியறிவைப் பெறுவதற்கு நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துங்கள்; எனினும், மார்க்க ஆசிரியர்களின் வழிகாட்டுதலைப் புறக்கணித்து விட்டு அவற்றை மற்றும் பயன்படுத்திக் கொண்டிருக்காதீர்கள்.

**மூன்றாவதாக: மாற்றுப் பெயர்களைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது**

இந்த நிஜமான உலகத்தில், பெயர் தெரியாத மாயை காணப்படுவது மிகப் பெரிய ஆபத்தாகும்; அதாவது, நம்மை யார் என்று காட்டிக் கொள்ளாமல்

எவ்விஷயத்தையும் நம்மால் சொல்லவும் முடியும்; செய்யவும் முடியும். இதன் காரணமாக, சில மக்கள், புண்படுத்தும் வார்த்தைகளையும் வதந்திகளையும் பொய்யான செய்திகளையும் எழுதி அனுப்புகிறார்கள். மற்றவர்களால் தாம் கேள்வி கேட்கப்படக் கூடாது என்பதற்காக இவ்வாறு செய்கிறார்கள்.

எனினும், நாம் நினைவில் கொள்ள வேண்டும்; மற்றவர்களின் கண்களுக்கு நாம் தென்படாமலிருக்கலாம்; ஆனால், மனிதகுலத்தைப் படைத்த அல்லாஹ்வின் பார்வையிலிருந்து நாம் தப்பிக்க முடியாது. எழுதப்படும் ஒவ்வொரு வார்த்தையும், அனுப்பப்படும் ஒவ்வொரு கருத்தும், செய்யப்படும் ஒவ்வொரு செயலும் நமது செயல்களின் பதிவேட்டில் பதிவு செய்யப்படாமலில்லை.

இஸ்லாம், நேர்மை மற்றும் பொறுப்புணர்வு எனும் மதிப்பீடுகளைப் பெற்றுத் திகழுமாறு வலியுறுத்திக் கூறுகிறது. இந்த **டிஜிடல்** உலகமானது, நீதி, நேர்மைகளை விட்டும் விடுதலை பெற்று விட்ட இடம் என நாம் கருதக் கூடாது, அதாவது, இந்த டிஜிடல் உலகில் நீதி, நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை எனக் கருதக் கூடாது. இந்த டிஜிடல் உலகிலும் நமது செயல்கள் பதிவு செய்யப்படுகின்றன; அச்செயல்களுக்கு நாம் மறுமையில் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

கடந்து செல்லும் ஒவ்வொரு நொடிப் பொழுதும் திரும்பி வரப் போவதில்லை; எனவே, நமது ஓய்வு **நேரங்களை பயனுள்ள** செயல்களாலும் நற்காரியங்களாலும் நிரப்புவோமாக! நமது விவகாரங்களில் நாம் செலவழிக்கும் **நேரமானது**, நாளை மறுமைத் தீர்ப்பு நாளின் போது நமக்கு உதவியாக அமையட்டுமாக! நாம் கண்டிக்கப்படுவதற்குக் காரணமாக அமையாமலிருக்கட்டுமாக! அல்லாஹுல் முஸ்தஆன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيِّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِينَ فِي غَزَّةَ وَفِي فِلَسْطِينَ وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.